# 12-07-2024 செய்தி

## புற்றுநோய் சவால்....

- உலகின் புற்றுநோய் தலைநகராக இந்தியா மாறிக் கொண்டிருக்கிறது என்கிற அதிர்ச்சித் தகவலை வெளியிட்டிருக்கிறது கேன்சர் முக்த் ஃபவுண்டேஷன்
- தங்கள் வாழ்நாளில் 10-இல் ஒரு இந்தியர் புற்றுநோயால் பாதிக்கப்படுகிறார் என்பதும் ஒரு கோடிக்கும் அதிகமான புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களை கையாள வேண்டியிருப்பதும் இந்தியா எதிர்கொள்ளும் சவால்கள்.
- இந்தியாவில் மட்டும் பத்து லட்சத்துக்கும் அதிகமானோர் ஆண்டுதோறும் பாதிக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், உயிரிழப்போரின் எண்ணிக்கை ஐந்து லட்சத்துக்கும் அதிகம். சிகிச்சை வளையத்துக்குள் வராமல், உயிரிழப்போர் குறித்த புள்ளிவிவரம் எடுக்கப்படவில்லை.
- இந்தியாவில் காணப்படும் புற்றுநோய் பாதிப்புகள் குறித்து ஆய்வை நடத்திய அந்த நிறுவனம் 26% பேர் தலை, கழுத்து; 16% பேர் உணவுக் குழாய், குடல்; 12% பேர் மார்பகம்; 9% பேர் ரத்தம் ஆகிய புற்றுநோய் பாதிப்புகளைச் சந்திக்கிறார்கள்.
- வாய், நுரையீரல், குடல், வயிறு ஆகியவற்றில் ஆண்களும், மார்பகம், கருப்பை வாய், கருப்பை ஆகியவற்றில் பெண்களும் புற்றுநோயால் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.
- உலக சுகாதார நிறுவனத்தின் கருத்துப்படி, மாறிவிட்ட வாழ்க்கை முறை, உடல் பருமன், சுகாதாரமற்ற உணவுகள், புகையிலைப் பழக்கம் ஆகியவை இந்தியாவில் அதிகரித்துவரும் புற்றுநோய் பாதிப்புக்குக் காரணங்கள், வளர்ச்சி அடைந்த மாநிலங்களில் வயிறு, குடல் பகுதிகளில் புற்றுநோய் பாதிப்புகள் அதிகமாகக் காணப்படுவதாக அந்த ஆய்வு தெரிவிக்கிறது.
- இதுவரை ஐம்பது வயதுக்கும் மேற்பட்டோர்தான் அதிகமாக புற்றுநோயால் பாதிக்கப்பட்டார்கள் என்றால் இப்போது முழுத் திறனுடன் உழைக்கும் வயதினர் பாதிக்கப்படுவது கவலையளிக்கும் செய்தி.
- புற்றுநோய் பாதிப்பு வயது குறைந்திருப்பது தேசத்தின் சுகாதாரத்தையும், தனிநபர் குடும்ப பட்ஜெட்டையும், நாட்டின் பொருளாதாரத்தையும், ஒட்டுமொத்த சமுதாயத்தையும் பாதிக்கும்.
- சோதனையின் மூலம் ஆரம்பத்திலேயே கண்டறிவதும், உடனடியாக சிகிச்சை மேற்கொள்வதும் பெரும்பாலான நோயாளிகளுக்குப் பலனளிக்கிறது.
- 27% நோயாளிகளில்தான் ஆரம்ப நிலையிலேயே புற்றுநோய் கண்டறியப்படுகிறது என்றும், 63% நோயாளிகள், நோய் முற்றிய நிலையில் சிகிச்சைக்கு வருகிறார்கள் என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.
- புற்று நோய்க்கு எதிரான விழிப்புணர்வுப் பரப்புரை, வாழ்க்கை முறை மாற்ற பாதிப்புகள் குறித்த விளம்பரங்கள், கூடுதலான சோதனைகள்,ஆரம்ப நிலை புற்றுநோய் சிகிச்சை ஆகியவை அவசரத் தேவைகள்.
- கோவிட் 19 கொள்கை நோய்த் தொற்றை இந்தியா எதிர்கொண்டதைப் போல, மௌனக் கொல்லியான புற்றுநோய்கக்கு எதிராக நாடு தழுவிய அளவில் விழிப்புணர்வும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையும், உடனடி சிகிச்சையும் அவசியமாகின்றன.

SURESH'